வால்பாறை நகராட்சியின் நகர்மன்ற கூட்டம் அக்டோபர் மாதம் 31.10.2022-ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

முன்னிலை : திருமதி.செ.அழகுசுந்தரவள்ளி
நகர்மன்ற தலைவர்

பொருள் :1

இந்நகராட்சிக்கு தணிக்கை முறையில் GST மற்றும் வருமானவரி 2020-21, 2021-22 மற்றும் 2022-23(Aug) வரை திரு.சண்முகவேல் என்பவர் தணிக்கை செய்துள்ளார். எனவே தணிக்கைக்கான தொகை ரூ.116000/-னை **Sri Sai & Co** என்ற நிறுவனத்திற்கு வழங்கவும் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 308 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் :2

வால்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2022-2023ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகள் வால்பாறை நகராட்சியின் சார்பாக கீழ்கண்டுள்ளவாறு நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பத்திரிக்கையின் பெயர் | பட்டியல் தொகை |
|---|---|---|
| 1. | மக்கள் குரல் நாளிதழில் கோயம்புத்தூர் | ரூ.50400/- |
| 2. | தினமலர் நாளிதழில் கோயம்புத்தூர் | ரூ.51995/- |
| 3. | தினகரன் நாளிதழில், கல் பப்ளிகேஷன் | ரூ.19950/- |
| 4. | தினமணி நாளிதழில், எக்ஸ்பிரஸ் பப்ளிக்கேசன்ஸ், மதுரை பிரைட் லிமிடெட் | ரூ.53760/- |
| 5 | தினத்தந்தி நாளிதழில் கோயம்புத்தூர் | ரூ.54075/- |

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 309 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் :3

இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவு குப்பை அகற்றும் வாகனங்களில் ஏற்படும் சிறு சிறு பழுதுகள் சரி செய்யவும், வாகன பழுது பார்த்தல், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் **"எனது நகரம் எனது பெருமை"** சம்பந்தமான விளம்பர பேணர்கள் துண்டு பிரசுரங்கள் அச்சிடப்பட்டு பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது மற்றும் நகர்மன்ற மாதாந்திர கூட்டம் ஆகியவற்றிகு ஏற்பட்ட செலவினத் தொகை ரூ.75488/- திரு.ம.செல்வராஜ், துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 310 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் :4**

இந்நகராட்சிக்குட்பட்ட 15வது வார்டு பகுதியில் உள்ள நல்லகாத்து சிமெண்ட் சாலை மிகவும் பழுது அடைந்துள்ளது. பொதுமக்கள் நலன் கருதி சாலையினை சீரமைக்க சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று தக்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 311 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் :5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5ல் அமைந்துள்ள பழைய வால்பாறை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மற்றும் வில்லோனி அப்பர் டிவிசன் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி சத்துணவு மையங்களில் பழுதடைந்த மேற்கூரை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 312 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் :6**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6ல் உருளிக்கல் பகுதியில் அமைந்துள்ள பள்ளிகளுக்கு சுற்றுசுவர் மற்றும் பள்ளி உட்புறம் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 313 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் :7**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7ல் அமைந்துள்ள ஷேக்கல்முடி மற்றும் முருகாளிஆகிய பகுதிகளில் பழுதடைந்த மயானகூரை பழுதுநீக்கம் பணி மேற்கொள்ளவும் ஷேக்கல்முடி மற்றும் முருகாளி ஆகிய பகுதிகளில் பள்ளிகளுக்கு சுற்றுசுவர் மற்றும் மேற்கூரை அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 314 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் :8

இந்நகராட்சிக்குட்பட்ட  புதியதாக திறக்கப்பட்டுள்ள அறிஞர் அண்ணா பூங்கா மற்றும் படகு இல்லம் பராமரிப்பு, பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள தலா 10 நபாகள் வீதம் அறிஞர் அண்ணா பூங்கா பராமரிப்பு மற்றும் படகு இல்லம் பராமரிப்பிற்கு 20 நபர்கள் வெளிக்கொணார்த்தல் மூலமாக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 315  அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் :9

இந்நகராட்சிக்கு அலுவலகத்திற்கு தேவையான எழுது பொருட்கள் கொள்முதல் செய்யவும் மற்றும் கணினி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானஎண். 316  அனுமதிக்கப்படுகிறது.**